செ.வெ.எண். 20/ஜூலை                                                                 தேதி : 16.07.2016

**பத்திரிக்கைச் செய்தி**

**மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு சிறப்பு கடன் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 162 பயனாளிகளுக்கு ரூ. 8 கோடியே 57 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கினார்.**






தருமபுரி மாவட்டத்திற்குட்பட்ட காரிமங்கலம், நல்லம்பள்ளி, மைக்ரோசேட் தருமபுரி, பாப்பாரப்பட்டி, பாலக்கோடு, மாரண்டஅள்ளி, அனுமந்தபுரம், புலிகரை ஆகிய இந்தியன் வங்கி கிளைகளின் சார்பில் 149 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவியும், புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் தனிநபர் கடன் 8 நபர்களுக்கும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதி 5 நபர்களுக்கும் என மொத்தம் ரூ. 8 கோடியே 57 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.07.2016) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் 149 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவியையும், புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் 8 நபர்களுக்கு தலா ரூ. 1000/- வீதம் தனிநபர் கடனுதவியையும், காரிமங்கலம் வட்டம், பொம்மனஅள்ளி கிராமத்தைச் சேர்ந்த செல்வி. சத்யா, திருமதி. காளாம்மாள் ஆகியோர் மின்சாரம் தாக்கி இறந்தமைக்காக அவர்களது வாரிசு தாரர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 நபர்களுக்கு ரூ. 6 இலட்சத்திற்கான காசோலையையும் வழங்கி பேசியதாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள் பெண்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேறவேண்டும் என்ற நோக்கில் மகளிர் நலனை குறிக்கோளாக கொண்டு எண்ணற்ற திட்டங்களை வகுத்து அத்திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். அதில் ஒரு அங்கமாக மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு இந்தியன் வங்கி ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதத்தை சுய உதவிகளுக்கான கடன் வழங்குதல் மற்றும் ஊக்குவித்தல்

மாதமாக அனுசரிக்கிறது இதனை முன்னிட்டு இன்று முதற்கட்டமாக சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வாழ்க்கைத்தரம் மேம்பாட்டிற்கான வீட்டு உபயோக பொருட்கள் கடனுதவி திட்டம், குழந்தைகளின் கல்வித்தரத்தினை உயர்த்த வித்யசோபா திட்டம் மற்றும் வீடு கட்டுவதற்கான கிரலட்சுமி கடன்களும், இந்தியன் வங்கியின் கூட்டுப்பொறுப்புக் குழு திட்டத்தின் கீழ் ஒருமித்த தொழில் புரியும் குழுக்களுக்கு தொழில் கடனும் பெருமளவில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் விவசாயம் சார்ந்த கடனுதவிகளான பயிர்கடன், முதலீட்டு கடன், விவசாய இயந்திரக்கடன், நில மேம்பாட்டுக்கடன், விவசாய பொருட்கள், தரம் பிரித்தல் மற்றும் மதிப்பு கூட்டுதல் கடன், பசுமை குடில், நிலை வலை குடில், விவசாய உற்பத்தியாளர்கள் நிறுவனம் சேமிப்பு கடன் கட்டுமானம் மற்றும் பல்வேறு விவசாய உற்பத்தி சேமிப்பு கிடங்கு பொருட்கள் ரசீதிற்கான கடன்களும் வழங்கப்படுகிறது. மேலும் கல்வி கடன், வீட்டுக்கடன், வாகனக்கடன், வணிகர்களுக்கான வியாபாரக் கடன், மூத்த குடிமக்களுக்கான ஓய்வூதியக்கடன், அனைத்து தொழில் முனைவோர்களுக்கான தொழில் கடன்களும் வழங்குகிறது.

இந்தியன் வங்கி 4 சதவீத வட்டி அடிப்படையில் மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு கடன்களை வழங்குகிறது. இந்தியன் வங்கி இதுவரை ரூ. 2525 கோடிகள் கடனாக வழங்கியுள்ளது. அதிகப்படியான கடன்களை வழங்குகிற வங்கியாக இந்தியன் வங்கி சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும் வங்கியின் மூலம் கல்வி உதவி கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கும் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 40 கோடி அளவிற்கு மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவி வழங்கியுள்ளது. கடனுதவி பெற்ற மகளிர் சுய உதவிக்குழுவினர் தங்கள் வாழ்வாதாரத்தை பெருக்கிகொள்ள வேண்டும் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் பேசினார்.

முன்னதாக அனைத்துத்துறைகளின் சார்பில் மக்கள் நல திட்டங்கள் குறித்த நிரந்தர கண்காட்சியை பார்வையிட்டு பின்னர் சமூக நலத்துறையின் சார்பில் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத்திட்டம், சமூக நலத்துறை மற்றும் சத்துணவு திட்டத்துறை கையேட்டினை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. பழனியப்பன், அரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.ஆர். முருகன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு. தொ.மு. நாகராசன், தருமபுரி நகரமன்ற தலைவர் திருமதி. சுமதி, டான்சில் தலைவர் திரு. மணிவண்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், இந்தியன் வங்கி துணை மண்டல மேலாளர் திரு. சுவாமிநாதன், மண்டல மேலாளர் திரு. சூரியநாராயணன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. முத்தரசு, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி. ரேவதி, முன்னாள் மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு. டி.ஆர். அன்பழகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.